இந்த ஆடுகள் ஒருநாள் பட்டி திரும்பும்
அந்த நாள் விரைவில் அரும்பும்   அரும்பும்

பைந்தமிழ் ஈழம் நாங்கள் பிறந்த
பச்சைப்பசேல் என்ற மேச்சல் நிலம்
னைந்து னைந்து இன்று உலகெல்லாம்
அலைந்து நாங்கள் படும் அவலம் பேரவலம்

இந்த ஆடுகள் ஒருநாள் பட்டி திரும்பும்
அந்த நாள் விரைவில் அரும்பும்   அரும்பும்

அன்னைமண் தமிழர் சென்னீரில் தோய
ஆழக்கடல் தாண்டி வெளியேறிநோம் 2
உண்மைதான் வெல்லும் அறம் வெல்லும் அந்த
ஒருநாள் வரும் என்று மனம் ஆறினோம் 2

இந்த ஆடுகள் ஒருநாள் பட்டி திரும்பும்
அந்த நாள் விரைவில் அரும்பும்   அரும்பும்

அயலான் மண்ணிலும் சோலையிருக்கலாம்
ஆனாலும் எமக்குது பாலைவனம் 2
துயர் நிலை மாறும் நாளை எம் தாய் மண்ணில்
துள்ளிக் கூத்தாடும் எங்கள் மனம் 2

இந்த ஆடுகள் ஒருநாள் பட்டி திரும்பும்
அந்த நாள் விரைவில் அரும்பும்   அரும்பும்

எடுகள் யாவும் ஓடி மறையும்
கிளக்கில் விடிவெள்ளி நாளை முளைக்கும்
வீடு மிகுந்த தமிழ்நாடு மலரும்
பிரபாகரன் அரசு எமையளைக்கும்

இந்த ஆடுகள் ஒருநாள் பட்டி திரும்பும்
அந்த நாள் விரைவில் அரும்பும்   அரும்பும் 2